بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/01/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## மஹ்தியாபாத், புர்கினாஃபாஸோவில் ஒன்பது அஹ்மதிகளின் வேதனை மிக்க ஷஹாதத் மற்றும் வருத்தத்திற்குரிய சம்பவத்தைப் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

وَ لَا تَقُوۡلُوۡا لِمَنۡ یُّقۡتَلُ فِیۡ سَبِیۡلِ اللّٰہِ اَمۡوَاتٌ ؕ بَلۡ اَحۡیَآءٌ وَّ لٰکِنۡ لَّا تَشۡعُرُوۡنَ ۝ وَ لَنَبۡلُوَنَّکُمۡ بِشَیۡءٍ مِّنَ الۡخَوۡفِ وَ الۡجُوۡعِ وَ نَقۡصٍ

مِّنَ الۡاَمۡوَالِ وَ الۡاَنۡفُسِ وَ الثَّمَرٰتِ ؕ وَ بَشِّرِ الصّٰبِرِیۡنَ ۝ الَّذِیۡنَ اِذَاۤ اَصَابَتۡہُمۡ مُّصِیۡبَۃٌ ۙ قَالُوۡۤا اِنَّا لِلّٰہِ وَ اِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ ۝ؕ

பொருள்: மேலும் அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்களை, இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால் நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை. மேலும், ஓரளவு பயத்தாலும், பசியாலும், செல்வங்கள், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும் (தூதரே!) நீர் பொறுமையாளர்களுக்கு நற்செய்தியைக் கூறுவீராக. அவர்கள், தங்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; மேலும் நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள். (திருக்குர்ஆன் 2: 155-157)

அல்லாஹ் தன்வழியில் உயிரை அர்ப்பணிப்பவர்களைப் பற்றி, 'அவர்கள் இறந்தவர்கள் அல்ல. மாறாக, உயிருள்ளவர்களே' என்று கூறியுள்ளான்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கடந்த நூறாண்டுக்கும் மேற்பட்ட காலகட்டமாக, அல்லாஹ்வின் வழியில் உயிர்த்தியாகங்கள் செய்யப்படுகின்றன. இந்த ஷஹீத்கள் அந்தஸ்த்துகளைப் பெற்று, இவர்களின் தரமும் எப்பொழுதும் உயர்ந்துக் கொண்டே இருக்கப் போகும் அதே வேளையில், இந்த உலகத்திலும் நிரந்தரமாக அவர்களுடைய பெயர்கள் ஒளிவீசுகின்றன. அல்லாஹ்வின் வழியில் அவர்கள் உயிரை அர்ப்பணிப்பது தமக்காக மட்டும் இருப்பதில்லை. அதற்கும் மேற்பட்டு, அது ஜமாஅத்தின் வாழ்வுக்கும் காரணியாக அமைகிறது. இவர்கள்தான் பின்னால் (உயிருடன்) இருப்பவர்களின் வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் வழியாக ஆகிறார்கள். பிறகு, அவர்கள் எவ்வாறு மரணித்தவர்கள் ஆக முடியும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா சய்யிதுனா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்களின் தியாகத்தின் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இந்த உயிரை அர்ப்பணித்தல் ஆரம்பமானது. உயிரை அர்ப்பணிப்பது என்பது, பொதுவாக ஆப்கானிஸ்தான்

மற்றும் துணைக்கண்டத்தின் அஹ்மதிகளின் பங்கில் இருந்து வந்தது. 2005 இல் ஆப்பிரிக்காவின் காங்கோ நாட்டில் ஓர் அஹ்மதி ஜமாஅத்திற்காக மட்டுமே தம் உயிரை அர்ப்பணித்தார். ஆனால், கடந்த நாள்களில் புர்கினா ஃபாஸோவில், ஆப்பிரிக்க மக்கள் காட்டிய, நேசம், நன்றியுணர்வு, ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கையால் நிறைந்திருந்த அந்த முன்மாதிரி நிகரற்றது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை நிராகரித்து விட்டால் உங்களுக்கு உயிர்பிச்சை வழங்கப்படும் என்று கூறி அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால், மலையையும் விட உறுதியான ஈமான் கொண்டிருந்த அந்த மக்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள்: 'உயிர் ஒருநாள் போகத்தானே போகிறது. இன்று இல்லை என்றால், நாளை. எனவே, அதைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் எங்கள் ஈமானை விற்க முடியாது. எந்த உண்மையை நாங்கள் பார்த்து விட்டோமோ அதை எங்களால் விட முடியாது.' இவ்வாறு ஒருவருக்குப் பிறகு ஒருவர் எனத் தம் உயிரை அர்ப்பணித்துக் கொண்டே சென்று விட்டார்கள். அவர்களின் மனைவிமார்களும் பிள்ளைகளும் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாரும் அழுது புலம்பவில்லை.**

ஆக, இந்த மக்கள் தான், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தக் காலத்தில் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா சய்யிதுனா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்களின் தியாகத்திற்குப் பிறகு அஹ்மதிய்ய உலகில் ஒரு புதிய வரலாற்றை எழுதியுள்ளார்கள். இவர்கள் தம் உலக வாழ்வை அர்பணித்து நிரந்தர வாழ்வைப் பெறக்கூடியவர்களாக ஆகி விட்டார்கள். இவர்கள் உயிர், செல்வம் மற்றும் நேரத்தை அர்ப்பணிப்பதற்கான வாக்குறுதியை எப்படி நிறைவேற்றினார்கள் என்றால், பின்னால் வந்து, முன்னால் வந்தவர்களை விட முந்திச் சென்று விட்டார்கள். அல்லாஹ் இவர்களில் ஒவ்வொருவரையும் தன் வழியில் தியாகங்கள் செய்பவர்களுக்கு தான் வழங்கியுள்ள அந்த நற்செய்திகளுக்கு உரியவர்களாக ஆக்குவானாக!

விவரங்களுக்கு ஏற்ப, புர்கினாஃபாஸோவுடைய ஒரு பெரிய நகரம் டோரீ ஆகும். அங்கு மஹ்தியாபாதில் ஒரு புதிய குடியிருப்பு உருவானது. ஜனவரி 11 அன்று, இஷா நேரத்தில் ஒன்பது அஹ்மதி பெரியவர்களைப் பள்ளியின் வளாகத்தில், மற்ற தொழுகையாளிகளுக்கு முன்னால் வைத்து இஸ்லாம் அஹ்மதிய்யத்தை நிராகரிக்காததன் காரணமாக, ஒவ்வொருவராக ஷஹீத் ஆக்கியுள்ளார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

ஆயுதம் ஏந்திய 8 பேர் பள்ளிக்கு வந்தார்கள். அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்கு வருவதற்கு முன்னால், அருகில் அமைந்துள்ள வஹாபிகளின் ஒரு பள்ளியில் மஃக்ரிபிலிருந்து இஷா வரையிலான நேரத்தை செலவிட்டார்கள். ஆனால், அங்கு யாருக்கும் இழப்பை ஏற்படுத்தவில்லை. இவர்கள் அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்கு வந்த போது, அப்பொழுது இஷாவுக்கு பாங்கு சொல்லப்பட்டுக் கொண்டிருந்தது. பாங்குக்குப் பிறகு, அவர்கள் பாங்கு சொல்பவர் மூலம் இவ்வாறு அறிவிப்பு செய்ய வைத்தார்கள்: 'மக்கள் விரைவாக பள்ளிவாசலுக்கு வந்து விடுங்கள். சில மக்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஏதோ பேச வேண்டும்.'

அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கையைப் பற்றி இமாம் அல்ஹாஜ் இப்ராஹீம் பிதீகாஹ் சாஹிப் அவர்களிடம் பல கேள்விகள் கேட்டார்கள். இமாம் சாஹிப் அவர்கள், 'நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்பவர்கள் ஆவோம். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் ஆவோம். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இமாம் மஹ்தி ஆவார்கள்' என்று கூறினார்கள். அதற்கு தீவிரவாதிகள், 'அஹ்மதிகள் உறுதியான காஃபிர்கள் ஆவார்கள்' என்று கூறினார்கள். இதற்குப் பிறகு பள்ளிவாசலுடன் இணைந்துள்ள தையல் மையத்திலிருந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களின் புகைப்படங்களைப் பற்றி கேட்டார்கள். இமாம் சாஹிப் அவர்கள் ஒவ்வொரு படத்தையும் பற்றி அறிமுகம் செய்து வைத்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் பொய்யானது என்று அவர்கள் கூறினார்கள். நஊதுபில்லாஹ்!

அதற்குப் பிறகு அவர்கள் பள்ளியில் இருந்த ஏறக்குறைய 70 தொழுகையாளிகளில், வயது ரீதியாக பிள்ளைகளையும் இளைஞர்களையும் பெரியவர்களையும் குழு அமைத்தார்கள். 10 முதல் 12 பெண்களும் இருந்தார்கள். பெரிய வயது மக்களிடம் பள்ளியின் வளாகத்திற்கு வருமாறு கூறினார்கள். இயலாதவர் ஒருவரும் இருந்தார். 'நீ எந்த வேலைக்கும் உதவ மாட்டாய். உள்ளேயே இரு' என்று கூறி அவர்கள் அவரை இருக்க விட்டார்கள். மற்ற மக்களை பள்ளியின் வளாகத்திற்கு அழைத்து வந்தார்கள்.

இமாம் சாஹிப் அவர்களிடம், அவர்கள் அஹ்மதிய்யத்தை நிராகரித்து விட்டால், அவர்கள் உயிருடன் விடப்படுவார்கள் என்று கூறப்பட்டது. அதற்கு இமாம் சாஹிப் அவர்கள், 'என் தலையை வேண்டுமானால் வெட்டிக் கொள்ளுங்கள். ஆனால், என்னால் அஹ்மதிய்யத்தை விட மாட்டேன்' என்று கூறினார்கள். தீவிரவாதிகள் அவர்களைத் தரையில் படுக்க வைத்து அவர்களின் கழுத்தில் கத்தியை வைத்தார்கள். அறுக்க முற்பட்ட போது, இமாம் சாஹிப் அவர்கள், 'என்னை நிற்க வைத்து கொல்லுங்கள்' என்று கூறினார்கள். எனவே, அவர்கள் அவர்களைத் துப்பாக்கியால் சுட்டு ஷஹீத் ஆக்கி விட்டார்கள்.

மற்ற மக்கள் பயந்து (நிராகரிக்க) சம்மதித்து விடுவார்கள் என்று தீவிரவாதிகள் நினைத்தார்கள். மேலும், இன்னொரு பெரியவரை அழைத்து, 'அஹ்மதிய்யத்தை நிராகரிக்கிறாயா, இல்லை மரணிக்கப் போகிறாயா?' என்று கேட்டார்கள். அவர்களும், 'என்னால் அஹ்மதிய்யத்தை விட முடியாது' என்று கூறினார்கள். பிறகு, அவர்களின் தலையில் துப்பாக்கியால் சுட்டு அவர்களையும் ஷஹீத் ஆக்கி விட்டார்கள். இவ்வாறு மற்ற மக்களையும் ஒவ்வொருவரையாக அழைத்து, ஷஹீத் ஆக்கி விட்டார்கள். ஒருவர் கூட அணுவளவும் பலவீனத்தையும் காட்டவில்லை; அஹ்மதிய்யத்தையும் நிராகரிக்கவில்லை. ஒருவருடைய ஈமான் கூட அசையவில்லை. எல்லாரும் ஒருவர் மற்றவரைக் காட்டிலும் அதிகம் உறுதியான நம்பிக்கை, கலப்பற்ற தன்மை, நன்றியுணர்வு மற்றும் துணிச்சலை வெளிப்படுத்தினார்கள். அல்லாஹ்வுக்கு முன் தம் உயிர்களை அர்ப்பணித்து விட்டார்கள். ஒவ்வொரு ஷஹீதும் குறைந்தது மூன்று குண்டுகளால் சுடப்பட்டார்கள். அவர்களில் இரட்டை சகோதரர்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் "தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் - (இரண்டு உயிர்த்தியாகிகளின் நற்குறிப்பு)" என்ற நூலில் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்களைப் பற்றி

எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்: **'அல்லாஹ் அவர்களின் பிரதிநிகள் பலரைப் பிறக்கச் செய்து விடுவான்.'**

எனவே, இன்று ஆப்பிரிக்காவில் வசிக்கக்கூடியவர்கள் இதற்கான முன்மாதிரியைக் காட்டி விட்டார்கள் என்பதற்கும், பிரதிநிதியாக இருப்பதற்கான உரிமையை நிறைவேற்றி விட்டார்கள் என்பதற்கும் நாம் சாட்சிகளாக உள்ளோம்.

இந்தத் தீவிரவாத நடவடிக்கை ஒன்றரை மணி நேரம் தொடர்ந்தது. மற்ற மக்கள் எந்த அளவு மனவேதனையைக் கடந்திருப்பார்கள் என்பதை அனுமானித்துப் பார்க்க முடியும். அவர்களுக்கு முன் அவர்களின் அன்பர்களை ஷஹீத் ஆக்கிக் கொண்டிருந்தார்கள்.

*பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இப்பொழுது இந்த ஷஹீத்களின் வாழ்கை நிலைகளை சுருக்கமாக எடுத்துக் கூறுவேன். அதிலிருந்து அவர்களின் ஈமானின் உறுதித்தன்மை தெரியவருகிறது.

**1. இமாம் அல்ஹாஜ் இப்ராஹீம் பிதீகாஹ் சாஹிப்:** இமாம் சாஹிப் அவர்கள் அந்தப் பகுதியின் எல்லாரைவிடப் பெரிய வஹாபி இமாமாக இருந்தார்கள். இமாம் சாஹிப் அவர்கள் மிகவும் அறிவாளியான மனிதராக இருந்தார்கள். அந்தப் பகுதியின் மக்கள் தமாஷிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். (இமாம் சாஹிப்) தமாஷிக் மொழியின் அறிஞராக இருந்தார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு பல கிராமங்களின் தலைமை இமாமாக இருந்தார்கள். அந்தப் பகுதியின் பெரும் பெரும் அறிஞர்கள் இவர்களிடம் வந்து அமர்வதைத் தமது மேன்மையாக கருதி வந்தார்கள்.

1998 இல் டோரீயில் முறையாக அஹ்மதிய்யா மிஷன் நிறுவப்பட்ட தகவல் இமாம் சாஹிப் அவர்களுக்குக் கிடைத்தது. அப்போது இவர்கள் ஏழு பேருடன் மிஷன் ஹவுஸுக்கு வந்தார்கள். மிகவும் ஆய்வு செய்த பிறகு, பைஅத் செய்தார்கள். புரிந்து கொண்டு உண்மையை ஏற்றார்கள். பிறகு, தியாகத்தின் உயர்தரமான உதாரணத்தை நிலைநாட்டினார்கள். இறைவன் பால் அழைக்கும் அச்சமற்றவராகவும், மாய்ந்து போகும் அஹ்மதியாகவும் இருந்தார்கள். இவர்களின் முயற்சிகளால் பகுதி முழுவதிலும் அஹ்மதிய்யத் பரவியது. மேலும், பல ஜமாஅத்கள் உருவாகின.

தப்லீஃக் செய்ய வேண்டும் என்ற ஒரு பித்து (பிடித்த நிலை) இருந்தது. கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டும் இவர்கள் தம்முடைய முயற்சிகளைக் கைவிடவில்லை. கிலாஃபத்துடனும் அளவற்ற முறையில் அன்பு நேசத்திற்கான தொடர்பு இருந்தது. மக்களுடன் மிகவும் நற்பண்புடன் பழகி வந்தார்கள். மற்றவர்களுக்காக தியாகம் செய்வது இவர்களின் பண்பாக இருந்தது. பகுதியின் மக்கள் இவர்களுக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள். எல்லாப் பொருள் தியாகத்திலும் எல்லாருக்கும் முதலாக தியாகம் செய்து வந்தார்கள். எல்லா வித ஜமாஅத் பணிகளிலும் முந்திக் கொண்டு பங்கெடுத்து வந்தார்கள்.

**2. அல்ஹஸன் ஆஃகு மாலீ ஆயல் சாஹிப்:** தொழிலைப் பொருத்தவரை, விவசாயியாக இருந்தார்கள். 1999 இல் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். பைஅத் செய்ததிலிருந்து கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வில் முன்னேறிக் கொண்டே சென்றார்கள். தொழுகைகளை முறையாக பேணக்கூடியவராகவும் தவறாமல் தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும் இருந்தார்கள். இவர்கள் ஜமாஅத்திற்காக உயிர், செல்வம் மற்றும் நேரத்தை செலவிட்டது அசாதாரணமானதாகும்.

**3. ஹுஸைனீ ஆ.்.கு மாலீ ஆயில் சாஹிப்: 1999** இல் பைஅத் செய்தார்கள். தமது கிராமத்தின் ஆரம்ப அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். தற்சமயம் அன்ஸாருல்லாஹ் ஸயீமாக தொண்டாற்றி வந்தார்கள். இவர்களின் இரட்டை சகோதரரான அல்ஹஸன் ஆ.்.கு மாலீ ஆயல் சாஹிப் அவர்களும் இந்த சம்பவத்தில் ஷஹீதானார்கள். சகோதரர்கள் இருவரும் ஒரே நாளில் உலகத்திற்கு வந்தார்கள். ஒரே நாளில் உலகை விட்டுச் சென்றார்கள்.

**4. ஹமீது ஆ.்.கு அப்துர் ரஹ்மான் சாஹிப்:** தொழிலைப் பொருத்தவரை, விவசாயியாக இருந்தார்கள். 1999 இல் பைஅத் செய்தார்கள். தூய உள்ளம் உடையவராகவும், மென்மையான இயல்புடையவராகவும் இருந்தார்கள். ஜமாஅத் நிகழ்ச்சிகளில் முதல் வரிசையில் உள்ளவர்களில் ஒருவராக இருந்தார்கள். இமாம் அவர்களின் உதவியாளராக இருந்தார்கள்.

**5. ஸுலஹ் ஆ.்.கு இப்ராஹீம் சாஹிப்:** தொழிலைப் பொருத்தவரை, விவசாயியாக இருந்தார்கள். ஜமாஅத்தான தொழுகைகளை முறையாக பேணி வந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். அறிவு பெற்றவராக இருந்தார்கள். மார்க்க மற்றும் அறிவு சார்ந்த உரையாடல்களை நிகழ்த்தி வந்தார்கள். மிகவும் ஒழுக்கமான இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். ஒவ்வொருவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்வது இவர்களின் சிறப்பு பண்பாக இருந்தது.

**6. உஸ்மான் ஆ.்.கு சவ்தே சாஹிப்:** இவர்கள் மஹ்தியாபாத் பள்ளிவாசலின் கட்டுமான பணியில் அதிகதிகமாக பங்கேற்று வந்தார்கள். தொழுகைகளை முறையாக பேணி வந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். தொழிலைப் பொருத்தவரை, வியாபாரியாக இருந்தார்கள். முற்றிலும் கலப்பற்ற மனிதராக இருந்தார்கள். எனக்கும் துஆவிற்காக முறையாக கடிதம் எழுதி வந்தார்கள்.

**7. ஆ.்.கு அலீ ஆ.்.கு மகோயல் சாஹிப்:** இவர்கள் தம் தந்தையாருடன் சேர்ந்து 1999 இல் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். தொழிலைப் பொருத்தவரை, விவசாயியாக இருந்தார்கள். தொழுகைகள் மற்றும் சந்தாக்களில் அதிகதிமாக பங்கு பெற்று வந்தார்கள்.

**8. மூஸா ஆ.்.கு அத்ராஹி சாஹிப்:** விவசாயம் செய்து வந்தார்கள். தஹ்ஹஜுத் மற்றும் பிற தொழுகைகளை முறையாக கடைபிடித்து வந்தார்கள். திக்ரே இலாஹியில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்கள் கலப்பற்ற மற்றும் மாய்ந்து போகக்கூடிய அஹ்மதியாக இருப்பதற்கான முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். தவறாமல் எனக்கு துஆவிற்கான கடிதங்கள் எழுதி வந்தார்கள்.

**9. அ.்.கு உமர் ஆ.்.கு அப்துர் ரஹ்மான் சாஹிப்:** ஷஹீத்மார்களில் எல்லாரையும் விடச் சிறியவராக இருந்தார்கள். 1999 இல் 20 வயதில் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். அதற்குப் பிறகு ஜமாஅத் உடனான கலப்பற்ற தன்மை மற்றும் நன்றி உணர்வில் முன்னேறினார்கள். மிகவும் கலப்பற்ற மற்றும் மாய்ந்து போகும் அஹ்மதியாக இருந்தார்கள். இவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி தீவிரவாதிகளிடம், **'**நான் துணை இமாம்**'** என்று கூறினார்கள்.

எட்டு நபர்களை ஷஹீதாக்கிய பிறகு, அனைவரையும் விடச் சிறியவராக இருந்தார்கள். ஆனால் இவர்கள், **'**எந்த வழியில் என் பெரியவர்கள் தியாகம் செய்தார்களோ நானும் அர்ப்பணமாகத் தயாராக உள்ளேன்**'** என்று மிகவும்

வீரமாக பதில் அளித்தார்கள். தீவிரவாதிகள் இவர்களை மிகவும் இரக்கமின்றி முகத்தில் துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஒவ்வொருவரின் பெயருடனும் ஆஃகு என்ற சொல் இணைந்துள்ளது. இதன் பொருள், **'**இன்னார் மகன்**'** என்பதாகும். **இவர்கள் அஹ்மதிய்யத்தின் மின்னும் நட்சத்திரங்கள் ஆவார்கள்.** தமக்குப் பின்னால், ஒரு முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் இவர்களின் பிள்ளைகளையும், கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வில் அதிகரிக்கச் செய்வானாக!

அல்லாஹ் அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பொறுமை மற்றும் மனதைரியத்தை வழங்குவானாக! அவர்களின் பெரியவர்கள் எந்த நோக்கத்திற்காகத் தம் உயிரை அர்ப்பணித்தார்களோ அதைப் புரிவதற்கான நல்வாய்ப்பைப் பெறுவார்களாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஷஹீத்களின் குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அவர்களை சொந்தக் காலில் நிற்க வைப்பதற்கும் நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் **சய்யிதுனா பிலால் ஃபண்டு** நிறுவப்பட்டது. அதிலிருந்து ஷஹீத்கள் (உடைய குடும்பத்திற்)காக செலவிடப்படுகிறது. ஷஹீத்கள்(உடைய குடும்பத்திற்)காக கொடுக்க விரும்பும் மக்கள் இந்த ஃபண்டில் தொகையை செலுத்துங்கள். இது அந்த ஷஹீத்களின் குடும்பத்தின் மீது நாம் செய்யும் கருணை ஒன்றும் அல்ல. மாறாக, அவர்களின் தேவைகளைக் கருத்தில் கொள்வதும், நிறைவேற்றுவதும் நமது கடமையாகும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளைச் சான்றாகக் கொண்டு இவ்வாறு கூறினார்கள்:* **இந்தத் தியாகத்தை செய்தவர்கள் இந்த சோதனையில் முழுமையாக வென்றார்கள். இப்பொழுது பின்னால் (உயிருடன்) இருப்பவர்களுக்கான சோதனை உள்ளது.** நாம் நமது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் நிலைபெற்றிருக்க அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ் இந்த ஷஹீதுகளின் அந்தஸ்தை உயர்த்துவானாக! மலரச் செய்வானாக! கனிதரச் செய்வானாக! அதன் விளைவாக ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மையான போதனை (விரைவில்) உலகில் பரவுவதை நாம் காண்போமாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடைசியில், ஷஹீத்களின் ஜனாஸா காயிப் தொழுகையுடன் சேர்த்து, அமெரிக்காவில் வசித்து வந்த* ***டாக்டர் கரீமுல்லாஹ் ஸேர்வீ சாஹிப்*** *மற்றும்* ***அவர்களின் துணைவியார் அமத்துல் லத்தீஃப் ஸேர்வீ சாஹிபா*** *ஆகிய இருவரின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ

اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**